# வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம்

## தரம் - 5

## பயிற்சி வினாத்தாள் – 13

- தயாரிப்பு : ஆசிரிய ஆலோசகர்கள் , வலிகாமம் கல்வி வலயம்
- வழிப்படுத்தல் : திரு.சி.முரளீதரன் (ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர்)

**1**

**வினாத்தாள் - I**

**ஒரு மணித்தியாலம்**

**சுட்டெண்: ……………………..**

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | **பெயரும் ஒப்பமும்** |
|---|---|
| **முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.** | ………………………… **பெயர்** ………………………… **ஒப்பம்** |
| **இரண்டாவது பரீட்சகர் (………………………) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.** | ………………………… **பெயர்** ………………………… **ஒப்பம** |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.** | ………………………… **பெயர்** ………………………… **ஒப்பம்** |
| **அதிபர் மேற்பாற்வை செய்தேன்** | |
| **வலய / மாகாண மேற்பார்வையாளர்** | |


வினாத்தாள் - 1

1. தரப்பட்ட இரண்டு படங்களுக்கும் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்க.




1. சூழலைப் பேணுவோம்
2. இயற்கையை இரசிப்போம்
3. தாவரங்களைப் பேணுவோம்.

2. தரப்பட்ட படத்தினை அவதானித்து அதிலுள்ள நிகழ்வுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிக



1. சூரியன் மெல்ல மெல்ல மறைகின்றது.
2. பூக்களில் வண்ணத்துப்பூச்சி தேன் குடிக்கின்றது.
3. பூக்களிடையே வண்ணத்துப்பூச்சி பறக்கின்றது.

3. இக் கூட்டத்துடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உரு எது ?



1. 
2. 
3. 

4. பின்வரும் மூன்று உருக்களுடன் தொடர்புடைய சொல்லைத் தெரிக.






1. பொதுப்போக்குவரத்து
2. அரச போக்குவரத்து
3. தனியார் போக்குவரத்து

சுட்டெண்: ..............................

5. இவ்வுருவினை சதுரமுகியாக ஆக்குவதற்கு மேலும் தேவையான சிறிய குற்றிகள் எத்தனை ?




1. 52  2. 54  3. 64

6. தரப்பட்ட நாணயக்குற்றிகள் ஒவ்வொன்றையும் சம பெறுமதியுடையதாக ஆகுமாறு எடுக்கும் போது பெறப்படும் நாணயக்குற்றிகள் எத்தனை ?




1. 30  2. 15  3. 17

7. வட்டச் சக்கரத்திலுள்ள முள் வலது புறமாக 10 நிமிடத்தில் ஒரு செங்கோணம் நகர்கின்றது எனின் அம்முள் 2 மணித்தியாலத்தில் நிற்கும் இடம் எது ?




1. A  2. B  3. C

8. தரப்பட்ட தளவுருக்களைக்கொண்டு உருவாக்கத்தக்க வடிவம்



1. சதுரம்  2. முக்கோணி  3. செவ்வகம்

9. பின்வரும் கவிதையில் வெற்றிடத்துக்கு மிகவும் பொருத்தமான சொற்கள் இடம்பெறும் விடை எது ?

| | |
|---|---|
| ……….. நாம் செல்லும் போது | 1. பஸ்சில் , விதிகளை , எங்கும் |
| வீதி .............. அனுசரிப்போம். | 2. வீதியில் , விதிகளை , எங்கும் |
| ஒழுக்கத்தை ................ பேணிடுவோம் | 3. வீட்டுக்கு , விதியை , எங்கும் |
| பொறுப்புடன் பயணம் செய்திடுவோம் | |

10. வீட்டுக்கு வெளியே செல்லும் போது நாமும் கூடச் சென்றிடுவோம்

நாம் மிதிபடினும் பாதுகாப்பைக் கொடுத்திடுவோம்.

இக்கவிதையின் கருத்து மிக நன்றாக பொருந்தக் கூடியது

1. தொப்பி  2. குடை  3. செருப்பு

11. தரப்பட்ட எண்கட்டத்தில் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் மூன்று அடுத்து வரும் எண்களைக் கூட்டும்போது கூட்டுத்தொகை 10 ஆகுமாறு அமையத்தக்க சந்தர்ப்பங்கள் எத்தனை ?

| | | | |
|---|---|---|---|
| 2 | 5 | 3 | 2 |
| 4 | 2 | 4 | 6 |
| 4 | 4 | 3 | 3 |
| 2 | 4 | 5 | 1 |

1. 10 2. 12 3. 15

12. தரப்பட்ட படத்தை அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்க.




1. சக்கரம் **A** வலமாக ஒரு தடவை சுற்றும் போது சக்கரம் **B** இடமாகச் சுற்றும்
2. சக்கரம் **B** இடமாக பல தடவைகள் சுற்றும் போது சக்கரம் **A** இடமாக சில தடவைகள் சுற்றும்
3. சக்கரம் **A** இடமாக ஒரு தடவை சுற்றும் போது சக்கரம் **B** வலது புறமாக பல தடவைகள் சுற்றும்


13. சிறுவர்களை 1 – 3 வயதுடைய 3 பிள்ளைகள் உள்ள குழுவாக்கும் போது 2 மாணவர்களும் 4 பிள்ளைகள் உள்ள குழுவாகப் பிரிக்கும் போது 3 மாணவர்களும் எஞ்சியிருந்தனர். இக்குழுவிலுள்ள சிறுவர்கள் எத்தனை பேர் ?

1. 24 2. 33 3. 23

14. ஒரு பெற்றோருக்கு இரண்டு ஆண்பிள்ளைகளும் மூன்று பெண்பிள்ளைகளும் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் திருமணமாகி இரண்டு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையும் பிறந்தனர் எனின் இக்குடும்பங்களில் மொத்தமாக உள்ள ஆண்கள் எத்தனை பேர்?

1. 11 2. 13 3. 12

15) நெய்யரியை அவதானித்து சரியான விடையைத் தெரிக.




1. A - C பயணத் தூரம் B – D இலும் கூடவாகும்.
2. B – D பயணநேரம் A - C இலும் அதிகமாகும்.
3. இரு பயண ஆரம்ப முடிவிடங்கள் சம தூரத்தில் உள்ளன.


16. ஓர் இடத்தில் இருந்து இருவர் எதிரெதிர்த் திசையில் 10 மீற்றர் நடந்து சென்றனர். பினனர் இருவரும் பின் திரும்பி 20 மீற்றர் நடந்தனர் எனின் தற்போது இருவரும் பயணத்தை ஆரம்பித்த இடத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் நிற்பர் ?

1. 10 மீற்றர் 2. 20 மீற்றர் 3. 15 மீற்றர்




LMDMUnit

17. கீழே தரப்பட்ட கட்டத்தில் அருகருகே ஒரே நிறம் அமையாதவாறு நிறந்தீட்டுவதற்கு ஆகக்குறைந்தது எத்தனை நிறப்பென்சில்கள் தேவை ?




1. 2 2. 3 3. 4

18. ஒளி ஊடுபுகவிடும் தாள்கள் A , B இல் இரு வடிவங்கள் வரையப்பட்டுள்ளன. இவற்றில் B ஊடுபுகவிடும்தாள் வலஞ்சுழியாக ஒரு செங்கோணம் சுழற்றப்பட்டு பின் இரண்டு தாள்களும் ஒன்றின் மேல் ஒன்று பொருத்தப்பட்ட போது தோன்றும் வடிவம் எது ?



A B



1 2 3

19. ஒரு வட்டமான சுற்றுவட்டத்தில் பாலனுக்கு வலது புறமாக 5 ஆவதாக சீலனும் சீலனுக்கு வலது புறமாக 5 ஆவதாக கரனும் கரனுக்கு 10 ஆவதாக பரனும் பரனுக்கு வலது புறமாக 6 ஆவதாக பாலனும் நிற்கின்றனர். கரனுக்கும் பாலனுக்கும் இடையிலுள்ளவர்கள் எத்தனை பேர் ?

1. 14 2. 15 3. 17

20. தரப்பட்ட சங்கிலித்துண்டுகளை இணைத்து மாலையாக மாற்றுவதற்கு ஆகக்குறைந்தது எத்தனை சங்கிலி வளையங்களை கழற்றி ஒட்டவேண்டும் ?



1. 3 2. 4 3. 5

21. ஒரு குறித்த மாதத்தின் மூன்றாம் நாள் ஞாயிற்றுக் கிழமை ஆகும். கடைசி நாள் சனிக்கிழமை ஆகும். அம்மாதத்தில் எத்தனை நாட்கள் உள்ளன ?

1. 28 2. 30 3. 31

22. ஒரு சுவர்க்கடிகாரத்தில் அதன் முகம் மேல்நோக்கி இருக்குமாறு ஒரு மேசைமீது கிடையாக வைக்கப்பட்டுள்ளது. நேரம் பி.ப 6.00 ஆக இருக்கும் போது இதன் மணித்தியால முள் கிழக்கு நோக்கி இருந்தது. நேரம் பி.ப 6.15 ஆக இருக்கும் போது அக்கடிகாரத்தின் நிமிடமுள் நோக்கி இருக்கும் திசை யாது ?

1. வடக்கு 2. தெற்கு 3. மேற்கு

23. சம இடைவெளித் தூரங்களுடைய 4 கொடிக்கம்பங்கள் 45 மீற்றர் இடைவெளியில் நடப்பட்டுள்ளன. 10 கொடிக்கம்பங்களுக்கு இடையிலான தூரம் யாது ?

1. 120 மீற்றர் 2. 135 மீற்றர் 3. 150 மீற்றர்


24. 2020 மாசி மாதம் 1ம் திகதி வெள்ளிக்கிழமை தனது 10 ஆவது பிறந்த நாளை கொண்டாடிய சுதா தனது 13 ஆவது பிறந்த நாளை என்ன கிழமை கொண்டாடுவாள் ?

1. புதன் 2. வியாழன் 3. செவ்வாய்

25. பெட்டியொன்றில் சிவப்பு நிற இனிப்புக்கள் நான்கு, மஞ்சள் நிற இனிப்புக்கள் ஏழு, பச்சைநிற இனிப்புக்கள் ஆறு உள்ளன. பெட்டியைப் பார்க்காமல் மஞ்சள் நிற இனிப்பொன்றைப் பெறுவதற்கு பெட்டியில் இருந்து ஆகக்குறைவாக எடுக்கவேண்டிய இனிப்புக்கள் எத்தனை ?


1. 12     2. 10     3. 11

26. தரப்பட்ட வரிப்படத்தில் நிழற்றப்பட்ட பகுதிக்குள் வரவேண்டிய எண்கள் எவை ? .






4 இன் பெருக்கம்     6 இன் பெருக்கம்

1. 12, 16, 20, 24
2. 12, 24, 36, 48
3. 12, 24, 36, 42

27. 


ஆக இருப்பதற்கான உருத்தொகுதி யாது ?

1.     2.     3. 

28. ரூபாய் 600 இன் காற்பங்கிலும் பார்க்க ரூபாய் 400 இன் அரைப்பங்கு எவ்வளவு கூடுதலாகும் ?

1. ரூபாய் 50     2. ரூபாய் 40     3. ரூபாய் 60

29. தரணி பாடசாலையில் இருந்து தனது வீட்டை அடைவதற்கு 8 km நடக்கவேண்டும். வீட்டிலிருந்து நூலகம் செல்வதற்கு 6 km நடக்கவேண்டும். மணிக்கு 4 km வேகத்தில் நடக்கும் தரணி பி.ப 12.30 இற்கு பாடசாலையில் இருந்து புறப்பபட்டு தனது வீட்டைக் கடந்து நூலகத்துக்கு நடந்து சென்றாள் எனின் அவள் நூலகத்தை அடைந்த நேரம் என்ன ?


1. பி. 4.00 மணி     2. பி.ப 3.00 மணி     3. பி.ப 5.00 மணி

30. என்ற கணிதச் செய்கையில் P , Q ,R இன் பெறுமதி முறையே

```
  P Q R
  P Q R
+ P Q R
  -----
  7 7 7
  -----
```

1. 3,5,9     2. 2,4,9     3. 2,5,9

31. இடைவெளியில் வரவேண்டிய எண் ?




1. 62     2. 18     3. 67

32. ஒரு பணப்பையில் 10 நாணயத்தாள்கள் உள்ளன. அவற்றின் பெறுமானங்கள் ரூபாய் 100, ரூபாய் 50 , ரூபாய் 20 ஆகும். ரூபாய் 20 நாணயத்தாள்களின் எண்ணிக்கையும் ரூபாய் 50 நாணயத்தாள்களின் எண்ணிக்கையும் சமம் ஆகும். பணப்பையில் இருக்கத்தக்க பணம் யாது ?

1. ரூபாய் 480 2. ரூபாய 590 ரூபாய் 150

33. கமலாவுக்கு நான்கு பிள்ளைகள் உள்ளன. அவர்களுக்கு இடையேயான வயது வித்தியாசம் 4 வருடங்கள். அவர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை 36 எனின் கடைசிப்பிள்ளையின் வயதென்ன?.

1. 6 வருடங்கள் 2. 3 வருடங்கள் 3. 8 வருடங்கள்

34. ஒரு குறித்த கிராமத்தில் நூலகத்தில் இருந்து பாடசாலைக்குச் செல்வதற்கான அறிவுறுத்தல்கள் பின்வருமாறு உள்ளன.

பிரதான வாயிலினூடாக வெளியே வந்து இடது பக்கத்துக்குத் திரும்பி 150 மீற்றர் செல்லும் போது எதிர்ப்படும் சந்தியில் வலதுபக்கம் திரும்பி 200 மீற்றர் செல்லும்போது இடது பக்கத்தில் பாடசாலையின் பிரதான வாயில் எதிர்ப்படும்.

அதற்கேற்ப பாடசாலையில் இருந்து நூலகத்திற்கு வருவதற்கு தேவையான அறிவுறுத்தல்களை சரியாக வழங்குவதற்கு பின்வரும் வாக்கியத்தில் இருக்கும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான தகவல்கள் முறையே குறிப்பிடப்படும் விடையாது ?


பிரதான வாயிலுக்கு வெளியே வந்து …………. திரும்பி 200 மீற்றர் செல்லும் போது எதிர்ப்படும் சந்தியில் …………. திரும்பி 150 மீற்றர் செல்லும் போது …………….நூலகத்தின் பிரதான வாயில் எதிர்ப்படும்.

1. வலது பக்கத்துக்கு, இடது பக்கத்துக்கு , வலது பக்கத்தில்
2. இடது பக்கத்துக்கு, இடது பக்கத்துக்கு, வலது பக்கத்துக்கு
3. வலது பக்கத்துக்கு, வலது பக்கத்துக்கு, இடது பக்கத்துக்கு

35. வியாபாரி ஒருவர் 6 பென்சில்களை ரூபாய் 100 இற்கு வாங்கினார். இரண்டு பென்சில்களை ரூபாய் 50 வீதம் விற்றார் எனின் முழுப்பென்சில்களையும் விற்பதன் மூலம் கிடைக்கும் மேலதிக பணம் எவ்வளவு ?

1. ரூபாய் 75.00 2. ரூபாய் 50.00 3. ரூபாய் 25.00

36. தரப்பட்ட கறுப்பு நிறந்தீட்டப்பட்ட மரக்குற்றி நிறந்தீட்டப்பட்டதற்கமைய வெட்டி வேறாக்கும் போது ஒரு முகத்திலும் நிறந்தீட்டப்படாத சிறிய மரக்குற்றிகள் எத்தனை ?



1. 12 2. 13 3. 14

37. குறித்த வருடமொன்றில் அடுத்தடுத்து வரும் இருமாதங்களின் நாட்களின் கூட்டுத்தொகை 62 ஆகும். இவ்விரு மாதங்களுக்கும் முன்னர் உள்ள இரு மாதங்களிலுமுள்ள மொத்த நாட்கள் எத்தனை ?

1. 61 2. 62 3. 60

38. மாலை நேரம் ஆரம்பித்த பயணம் ஒன்றில் முக்கிய இடங்களைக் கடந்தபோது காட்டிய நேரங்கள் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளன. பயண நேரத்தின் ஒழுங்கைக் காட்டும் விடையைத் தெரிக.

| 21:30 | 17:45 | 23:45 | 05:30 | 03:15 |
|---|---|---|---|---|
| A | B | C | D | E |

1. BACDE 2. BACED 3. BADCE

39. மூன்று ஆண்கள் மூன்று பெண்கள் அடங்கிய சிறுவர் குழுவினரை 5பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கத்திட்டமிடப்பட்டது. இரண்டு ஆண்கள் மூன்று பெண்கள் அடங்கிய குழுக்களாகவும் இரண்டு பெண்கள் மூன்று ஆண்கள் அடங்கிய குழுக்களாகவும் பிரிக்கப்பட்டால் எத்தனை வகையாகப் பிரிக்கலாம் ?

1. 6 2. 5 3. 7

40. 1 தொடக்கம் 24 வரை இலக்கமிட்டு நேராக வரையப்பட்ட கட்டங்களில் இரண்டு மாணவர்கள் ஓர் ஒழுங்கிற்கமையப் பாய்கின்றனர். முதலாவது மாணவன் 2ம் கட்டத்தில் ஆரம்பித்து ஒன்றைவிட்டொரு கட்டம் பாய்கின்றான். இரண்டாவது மாணவன் 24 ஆம் கட்டத்தில் இருந்து ஆரம்பித்து இரண்டைவிட்டொரு கட்டம் பாய்கின்றான் எனின் எவ்விலக்கங்கள் உள்ளகட்டங்களுக்குள் இருவரும் பாய்ந்திருப்பர் ?

1. 4, 15, 18 2. 6, 12, 18 3. 6, 15, 18

# வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம்

## தரம் - 5

## பயிற்சி வினாத்தாள் – 13

- தயாரிப்பு : ஆசிரிய ஆலோசகர்கள் வலிகாமம் கல்வி வலயம்
- வழிப்படுத்தல் : திரு.சி.முரளீதரன் ( உதவிக்கல்விப்பணிப்பாளர்) (வலயக்கல்வி அலுவலகம் - வலிகாமம்)

**2**

## வினாத்தாள் - II

**1 மணித்தியாலம் 15 நிமிடம்**

**சுட்டெண்: ……………………..**

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் உள்ள குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ் வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன். | ………………………… பெயர் ………………………… ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர் (………………………) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன். | ………………………… பெயர் ………………………… ஒப்பம |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன். | ………………………… பெயர் ………………………… ஒப்பம் |
| அதிபர் மேற்பாற்வை செய்தேன் | |
| வலய / மாகாண மேற்பார்வையாளர் | |

**1) பந்தியை வாசியுங்கள்.**

அந்த கிராமத்தின் அமைதியை இடையிடையே சாலையில் விரைந்து செல்லும் வாகனங்களின் இரைச்சல் கலைக்கின்றது. பறவைகளின் நாதம் காற்றோடு கலந்து இனிமையை பரப்புகின்றது. ஓடி ஆடித் திரிந்து குறும்பு செய்யும் சிறுவர்களால் அந்த இடம் மகிழ்ச்சி பெறுகின்றது. மரங்களை அசைத்துச் சிலுசிலுவென வீசும் காற்று குளிர்மையைத் தருகிறது. பூத்துச் சொரியும் மலர்களால் கிராமமே வண்ணமயமாகின்றது.

- **பந்தியை மாத்திரம் துணையாக கொண்டு விடையளிக்குக.**

I. கிராமத்தை வண்ணமயமாக்குவது எது ?

............................................................................................................

II. "களிப்பு" என்பதன் ஒத்தசொல்லை எழுதுக.

............................................................................................................

III. காற்றோடு கலந்து இனிமையைப் பரப்புவது எது?

............................................................................................................

IV. சிறுவர்களின் இயல்பு எவ்வாறு விளக்கப்படுகிறது?

............................................................................................................

V. கிராமத்தின் அமைதியைக் கலைப்பது எது ?

............................................................................................................

VI. இப் பந்திக்கு மிகவும் பொருத்தமான தலைப்பு ஒன்றைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

**(i)** பறவைகளின் நாதம்

**(ii)** அழகிய கிராமம்

**(iii)** சிறுவர் குறும்பு

**2) உயர்திணை இறந்தகால பன்மை வினைச்சொல்லை தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.**

**(i)** பிரகாசித்தன

**(ii)** பாடினார்கள்

**(iii)** சென்றான்

**3) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

முடியாது / மறக்க / பயணத்தை / கடுகதிப் / புகையிரதப் /அந்தக் /

............................................................................................................

**4) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலை தொடர்பு சரியாயின் ✓ எனவும் பிழையாயின் x எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.**

**(i)** மான் கூட்டம் ஆற்றங்கரையை நோக்கிச் செல்கின்றது. (      )

**(ii)** தொழிலுக்காகப் பலர் நகரங்களை நோக்கி பயணிக்கின்றனர். (      )

**(iii)** கடலலை காரணமாக மோசமான மண்ணரிப்பு ஏற்படுகின்றன. (      )

**(iv)** அம்மா அதிகாலையில் எழுந்து கோயிலுக்கு சென்றான். (      )

**5) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

**(i)** பறவைகள் எங்கிருந்து வருகின்றன

**(ii)** மாலா நீ கடைக்கு வருவாயா

6) **(i) பின்வரும் பழமொழியை பூர்த்தி செய்ய பொருத்தமான சொல்லை கீறிட்ட இடத்தில் எழுதுக.**

……………… அறியாது காலை விடாதே.

**(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

………………………………………………………………………………………

7) **பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.**

**(i)** அப்பா நேற்று சந்தைக்குப் போனவர்.

………………………………………………………………………………………

**(ii)** கலா கடையில் சவுக்காரம் வாங்கினாள்.

………………………………………………………………………………………

8) **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் உள்ள வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

**(i)** பல்வேறு புதிய விடயங்களை அறிந்து கொள்ள. ………………… (இணையம்,இனையம்) உதவுகின்றது.

**(ii)** அவர்கள் அங்கிருந்த ………….. (குப்பைகூழங்களை, குப்பைகூளங்களை ) அகற்ற உதவினார்கள்.

9) **தரப்பட்டுள்ள தொடர்மொழிகளுக்கு ஒரு மொழியை எழுதுக.**

i நம்பமுடியாத கதை **:** ...........................................................................................

ii வீண்செலவு செய்பவன் **:** ...........................................................................................

10) **ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச்சொல்லைத் தரப்பட்டுள்ள கட்டங்களுள் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

11) **கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i. We ..........................SriLankans. (am, is, are)

ii.Where .......................you live? ( is,are,am )

**12) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.**

i. going/ am/ canteen/ the/ to / I /

.................................................................................................................................

ii. curries /eat/ We/ with/

.................................................................................................................................

LMDMUnit

13) **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i. தொளஹ -.....................................................


ii. இதிரியட்ட -................................................

14) **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.**

உங்கள் நண்பன் யார் ?

...................................................................................................................................................


15) இங்கு வகைக்குறிக்கப்பட்டுள்ள எண்ணை இலக்கங்களில் எழுதுக.



..................................

16) எழுத்தில் தரப்பட்டுள்ள எண்ணை **இலக்கத்தில்** எழுதுக.

ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தாறு. ......................................

17) 

இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.

.................................................

18) ஒரு அணியில் 8 மாணவர்கள் வீதம் 816 மாணவர்களை எத்தனை அணிகளாகப் பிரிக்கலாம் ?

..............................................................

19) இவ் உருவுக்கு எத்தனை சமச்சீர்க் கோடுகள் வரையலாம்.



.................................................

20) 3 + 5 = 8 என்பதனை உரோம எண்ணில் தருக.

.........................................................................................................................................................

21) இவ் எண்கோலத்தில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i. 8,32,64,128, ............................

ii. 30,21,12,................................

22) பொதி ஒன்றில் 3kg 75g தேயிலையும் மற்றொரு பொதியில் 8kg 50g தேயிலையும் இருக்கின்றது.இரண்டு பொதிகளிலும் உள்ள தேயிலையின் மொத்த நிறையினை கிராமில் எழுதுக.

...............................................................................................................................

23) ஒரு பாத்திரத்தில் 7 லீற்றர் 50 மில்லிலீற்றர் நீர் இருந்தது. அப்பாத்திரத்திலிருந்து 3 லீற்றர 150 மில்லிலீற்றர் நீர் குளிர்பானம் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டது. தற்போது எஞ்சியிருக்கும் நீரின் அளவை லீற்றர், மில்லிலீற்றரில் தருக.

...............................................................................................................................

24) i.நேரம் முற்பகல் ஒன்பது மணி நாற்பத்தைந்து நிமிடம் என்பதனை இருபத்துநான்கு மணித்தியாலக்கடிகாரம் காட்டும் விதத்தினைத் தரப்பட்டுள்ள அடைப்பினுள் எழுதுக.

.............. : .............

ii. 


கடிகாரம் காட்டும் நேரத்தினை சாதாரண நேரத்தில் தருக.

..........................................................................................


25) பாடசாலை ஒன்றின் பரிசளிப்பு விழா மு.ப. 8.45 மணிக்கு ஆரம்பமாகி 3மணித்தியாலங்கள் 20 நிமிடங்களில் நிறைவடைந்தது எனின் பரிசளிப்பு விழா எத்தனை மணிக்கு நிறைவடைந்தது ?

...............................................................................................................

26) i.சமமான அடிகளைக் கொண்ட ஆறு சதுர பக்கங்களினால் மாத்திரம் ஆக்கப்படும் திண்மத்தின் பெயரினை எழுதுக.

......................................................................

ii. கீழே தரப்பட்டுள்ள விரிவினால் ஆக்கக்கூடிய திண்ம உருவின் பெயரினை எழுதுக.



...........................................................

27). 


i. உருவில் காட்டப்பட்டுள்ள பொர்ருட்களில் நிறை கூடிய பொருள் எது ?

........................................................



ii. உருவில் காட்டப்பட்டுள்ள பொர்ருளின் நிறையை எழுதுக.?

........................................................

28) குமணன் P என்ற இடத்திலிருந்து புறப்பட்டு தெற்கு நோக்கி 2km நடந்து சென்று அங்கிருந்து மேற்கு நோக்கி 5km சென்று பின் வடக்கு நோக்கி 3km நடந்து சென்று Q என்ற இடத்தை அடைந்தான் எனின் அவன் பயணம் செய்த தூரம் எத்தனை மீற்றர் ?

..........................................................................

29) ஒரு மாணவனுக்கு 7 நிறப்பென்சில்கள் வீதம் 238 மாணவர்களுக்கு வழங்குவதற்கு எத்தனை நிறப்பென்சில்கள் தேவை ?

..........................................................................

**30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்த தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) இலங்கையில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம்


1) திருகோணமலை 2) அம்பாந்தோட்டை 3) கொழும்பு

31) பூரண சந்திரன் தோன்றும் தினம்

1) அட்டமி 2) அமாவாசை 3) பௌர்ணமி

32) தாவர இலைகளில் கூடு கட்டும் பிராணி

1) அணில் 2) செவ்வெறும்பு 3) தூக்கணாங்குருவி

33)  அருகிலுள்ள இவ்வுபகரணத்தின் பெயர் என்ன ?

1) திசைகாட்டி 2) காற்று வேகமானி 3) காற்றுத்திசைகாட்டி

34) நிறையுணவில் அடங்கியிருக்கும் பிரதான போசணைக்கூறுகள் எவை ?

1) காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு

2) புரதம், கனியுப்பு, விற்றமின்கள்

3) கொழுப்பு, விற்றமின்கள், காபோவைதரேற்று

35) இவ்வுபகரணத்தின் பயன்பாடு யாது?



1) சாந்துக்கலவை பூசப்பட்ட சுவரை அழுத்தமாக்குதல்.

2) மணல், சாந்து அள்ளுதல்.

3) தரை சுவர் மட்டங்களை சீராக்குதல்.

36) இங்கிலாந்தில் பிறந்து இலங்கையில் மறைந்த விஞ்ஞானி யார் ?

1) டி.சி. ஜாயா 2) டி. பி. ஜெயத்திலகா 3) ஆதர் சி.கிளாக்

LMDMUnit

37) இரவில் மலரும் பூக்கள் எவை ?

1) சூரியகாந்தி, அலரி, செவ்வரத்தை

2) கடுபுல், அல்லி, மல்லிகை

3) ரோஜா, அகத்தி, அந்திமந்தாரை

38) சர்வதேச விளையாட்டுப்போட்டி ஒன்றில் எமது நாட்டின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுவது

1) தேசியக்கொடி 2) தேசிய இலச்சினை 3) தேசிய பறவை

39) ஒரு பெரிய மட்பானையை தட்டுவதன் மூலம் ஒலி எழுப்பப்படும் இசைக் கருவியை எவ்வாறு அழைப்பர் ?

1) மிருதங்கம் 2) கடம் 3) தம்பட்டம்

40) நுளம்பின் வாழ்க்கைப் படிநிலைகள் **முறையே**

1) முட்டை - கூட்டுப்புழு - நிறையுடலி - குடம்பி

2) முட்டை - குடம்பி - கூட்டுப்புழு – நிறையுடலி

3) முட்டை - கூட்டுப்புழு - குடம்பி – நிறையுடலி

41) இரவு நேரத்தில் பூக்கும் பூக்கள் வாசனை அதிமாக இருப்பதற்கு காரணம்

1) சூரிய ஒளி கிடைக்காமையால்

2) வண்டுகளைக் கவருவதற்கு

3) காற்று வீசுவதனால்

42) அதிக குளங்களைக் கட்டிய மன்னன்

1) துட்டகைமுனு 2) காசியப்பன் 3) மகாசேனன்

43) பின்வருவனவற்றுள் இலங்கையின் தேசிய இலச்சினை பொறிக்கப்படாத ஆவணம்

1) கடவுச்சீட்டு 2) இலவசப்பாடநூல் 3) பயிற்சிக்கொப்பிகள்

44) வியாபாரப் பண்டம் ஒன்றின் தரத்தை உறுதிப்படுத்தும் சர்வதேச தரச்சான்றிதழ்

1) ISO 2) SLS 3) SOS

45) கிராமப்புறங்களில் ஆழமற்ற நீர்நிலைகளில் மீன் பிடிக்க உதவும் பாரம்பரிய உபகரணம்

1) அத்தாங்கு 2) கரவலை 3) கரப்பு

46) மிக விரைவாக ஆவியாகக்கூடிய திரவம் **அல்லாதது**

1) பெற்றோல் 2) தின்னர் 3) மண்ணெண்ணெய்

47) தரப்பட்டுள்ள உணவுகளில் உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவு எது?

1) சோறு 2) பலாக்காய் 3) இறைச்சி

LMDMUnit

48) “எனது உள்ளத்தின் அமைதியை எனது நண்பர்களும் உணரட்டும், எனது வீட்டாரும் உணரட்டும்” என்ற உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாடு எது?

1) மலர்வு 2) மனவுறுதி 3) பிரார்த்தனை

49) கீழே தரப்பட்டுள்ளவற்றுள் உலக மரபுரிமையாக கணிக்கப்பெற்றிருப்பது

1) முல்லைத்தீவு கடற்கரை 2) யாழ்கோட்டை 3) மகாபோதி

50) அசுத்தமடைந்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய் **அல்லாதது**

1) கொலரா 2) மலேரியா 3) செங்கண்மாரி

51) காந்தம் ஒன்றினால் **கவரப்படாத** பொருள்

1) கடதாசி 2) இரும்பாணி 3) பூட்டுசி

52) பின்வருவனவற்றுள் சர்வதேச கைகழுவும் தினமாக அமைவது

1) ஒக்ரோபர் 15 2) டிசம்பர் 5 3) நவம்பர் 1

53) பெண்களின் உருவங்களை ஓவியங்களாக வரைந்துள்ள இடம்

1) தலதா மாளிகை 2) எம்பக்க 3) சிகிரியா

54) வித்து முளைக்கும் போது முதலில் வெளிவருவது

1) நார்வேர் 2) முளைவேர் 3) பக்கவேர்

55) நுளம்பு கடிக்காதிருக்க உடலில் பூசும் எண்ணெய் எது?

1) ஒலிவ் எண்ணெய் 2) எள்ளெண்ணெய் 3) காவட்டம்புல் எண்ணெய்

56) பின்வருவனவற்றுள் இரசாயன வளமாக்கியாக அமைவது

1) கூட்டெரு 2) யூரியா 3) மாட்டெரு

57) பின்வரும் எந்த விளையாட்டில் காற்கவசம், கையுறை என்பன அணிவார்கள்

1) வொலிவோல் 2) கிரிக்கட் 3) எல்லே

58) செயற்கைக் குளிர்பானங்களில் சீனி அளவு அதிகம் என்பதைக் குறிக்கும் குறியீடு

1) சிவப்பு நிறம் 2) பச்சை நிறம் 3) செம்மஞ்சள் நிறம்

59) இடிமின்னல் ஏற்படும் வேளைகளில் நாம் **செய்யக்கூடாதது**

1) வீட்டிற்குள் இருத்தல் 2) பாதணி அணிந்திருத்தல் 3) கைபேசியில் கதைத்தல்

LMDUnit

60) **“என் குடும்பத்தாருடன் சென்ற சுற்றுலாவின் போது நான் கண்டு களித்த விடயங்கள்”** என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. ( ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

**(i)** ……………………………………………………………………………………………………..............

……………………………………………………………………………………………………..............

**(ii)** ……………………………………………………………………………………………………..............

……………………………………………………………………………………………………..............

**(iii)** ……………………………………………………………………………………………………..............

……………………………………………………………………………………………………..............

LMDMUnit